மாகாணக் கல்வித் திணைக்களம்

வடக்கு மாகாணம்

முதலாந் தவணைப் பரீட்சை – 2016

# தமிழ் இலக்கிய நயம்

சுட்டெண் : .................... தரம் : 10 நேரம் :- 3 மணித்தியாலங்கள்

---

1, 2, 3, ஆம் வினாக்களுக்கும் 4, 5, 6, 7 ஆம் வினாக்களுள் எவையேனும் இரு வினாக்களுக்கும் விடை தருக.

01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக?

1. பாரதிதாசனின் இயற் பெயர் என்ன?
2. பாரதிதாசன் இயற்றிய நூல்களுள் எவையேனும் இரண்டினைத் தருக?
3. பண்டைக் காலத்தில் இலக்கியங்கள் எவற்றில் எழுதப்பட்டிருந்தன?
4. மரம் என்பது உயர்திணை என்னும் கட்டுரைகளை எழுதியவர் யார்?
5. மரங்களில் எல்லாமே சிபிகள், எல்லாமே சீதக்காதிகள் இங்கு இடம் பெறும் அணியை விளக்குக
6. மனிதன் படைத்த மரங்கள் எவையெனக் கட்டுரை ஆசிரியர் குறிப்பிடுகிறார்?
7. "எனக்கு ஒன்றும் தெரியவில்லை நீங்களே சொல்லி விடுங்கள்" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
8. "வாழ்க்கை என்பது போராட்டம் இதில் வலிமையானது வாழும்" என்று கூறியவர் யார்?
9. "கோச்சிவாழ கொப்பர் வாழ" கோச்சி கொப்பர் என்பவற்றின் திருத்தமான வடிவங்களைத் தருக?
10. "அமுதம்போல் செந்தமிழில் அமைந்த நூல்கள்" இங்கு இடம்பெறும் அணி?

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

02. பின்வரும் செய்யுட் பகுதியினதும் உரைப்பகுதியினதும் பொருளை உமது சொந்த நடையில் எழுதுக. அடிக்கோடிட்ட பகுதியின் சிறப்பைத் தருக.

1. மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றெனப துணர்வ தற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில்யாண்டும்.

2. மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து, பசிக்கு உணவு ஊட்டி, உடுத்த உடையாகி வசிக்க வீடாகி நோய்க்கு மருந்தாகி அவன் பயணத்திற்குச் சக்கரங்களாகி அவன் வேலைகளில் கைகளுக்குக் கைகளாகி அவன் சுவாசத்திற்காகக் காற்றைச் சலித்துக் கொடுத்து அவனுக்காக மேகங்களைக் கெஞ்சி பிச்சை கேட்டு, ஓ! மரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

(10x2=20)

பகுதி II

3. கீழே தரப்பட்டுள்ள பாடற் பகுதியை அல்லது உரையாடல் பகுதியை வாசித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்.
நூலெல்லாம் முறையாக ஆங்கமைந்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வருகை செய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புது நூலாயின்
முடிதனிலே சுமந்து வந்து தருதல் வேணடும்.

1 எத்தனை வீதிகளுக்கு ஒரு நூலகம் அமைய வேண்டும் என்று கவிஞர் கருதுகின்றார்?
2 அந்த நூலக இல்லம் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார்?
3 அங்கு குவிந்திருக்க வேண்டியவை எவை?
4 சிறுநூலும் புது நூலாயின் என்ன செய்ய வேண்டும்?
5 பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்தினை எழுதுக?

1. இல்லம் 2. முடி 3. கோலம் 4. செய்தித்தாள்

(5x4=20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி III

ஏதாவது இரு வினாக்களுக்கு விடை தருக

4. மரம் என்பது உயர்திணை என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

    1 மரத்துடன் மனிதனை எவ்வாறு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்?

    2 தனது கருத்துக்களை கட்டுரையாசிரியர் எடுத்துக் கூறுவதிலுள்ள சிறப்புக்கள் எவை?

(20 புள்ளிகள்)

5. புத்தகசாலை என்னும் கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

    1 தனித்தொரு வீட்டில் புத்தகமும் கவிஞரும் கையோகம்புரிந்த வேளையில் அவர் அடைந்த மகிழ்ச்சி எவ்வாறு காட்டப்படுகிறது?

    2 புத்தகசாலை எதற்காக நாட்டில் வேண்டும் என்று கவிஞர் கூறுகின்றார்?

    3 எத்தகைய நூல்களை நூலகத்திற் தெரிந்தெடுத்து வைக்க வேண்டும் என்று கூறப்படுகிறது?

(20 புள்ளி)

6. மென்மையே வாழும் என்ற கட்டுரையில் மென்மையே வாழும் என்ற கருத்தை வலியுறுத்தக் கவிஞர் கையாளும் உத்திகளை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளி)

7. மருத்துவிச்சி வாழ்த்து என்னும் பகுதியில்

    அ. மருத்துவிச்சியின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

    ஆ. எவ்வாறான பொருள்களுடன் குழந்தை வந்திருக்கிறாரா என மருத்துவிச்சி வினவுகிறாள்?

(20 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

(4) (i) நீர்க்கோளம் வரையறை செய்க. (2 புள்ளிகள்)

(ii) நீர்ப்பரம்பலில் அடங்கும் நீர் நிலைகள் 3 தருக. (3 புள்ளிகள்)

(iii) நீர்ப்பற்றாக்குறை என்றால் என்ன? (3 புள்ளிகள்)

(iv) நீர்ப்பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்சினைகள் 3 தருக. (4 புள்ளிகள்)

(5) (i) ஆசியப் பிராந்தியத்தின் சார்பு ரீதியான அமைவிடத்தின் எல்லைகளைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(ii) தெற்காசியாவின் பௌதிக தரைத்தோற்ற அம்சங்கள் 2 தருக. (2 புள்ளிகள்)

(iii) ஆசியப் பிராந்தியத்தில் முக்கியம் பெறுகின்ற நதிகள் 6 தருக. (3 புள்ளிகள்)

(iv) அயன வலயக் காலநிலையின் பொதுவான இயல்புகள் 3 தருக. (4 புள்ளிகள்)

(6) (i) உயிர்க்கோளத்தின் ஆக்கக்கூறுகள் 3 தருக. (2 புள்ளிகள்)

(ii) உயிர்க்கோளத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 3 தருக. (2 புள்ளிகள்)

(iii) உயிர்க்கோளத்தின் நிலைத்திருப்பில் செல்வாக்குச் செலுத்தும் காலநிலை மூலகங்கள் 3 தருக. (2 புள்ளிகள்)

(iv) பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப மனித நடவடிக்கைகள் மாற்றமடைவதற்கு உலக ரீதியான உதாரணங்கள் 3 தருக. (3 புள்ளிகள்)

நீரியல் வட்டச் செயற்பாட்டைச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)


Education கல்வி அடியாபன
kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page